# அனுமான் கடலைக் கடந்த பொழுது...

## சாந்திப்பிரியா





( நன்றி: ஜோதிர்மயானந்தா அவர்களின் **Hanuman crosses the Ocean, Yoga Guide, May 2008** என்பதின் சுருக்கம். அவர் எழுதியுள்ள அனைத்தையும் தமிழில் பிரசுரிக்க எனக்கு முழு உரிமை தந்துள்ளார் )

இராமாயணத்தில் ஆஞ்சனேயர் முக்கிய கதா பாத்திரம். இராமனுக்கு அடுத்து பலமிக்கவர் அவர் என்பதே உண்மை. அளவற்ற பக்தியும், தாம் எடுத்துக் கொண்ட கடமையை நிறைவேற்றுதலிலும், இராம பக்தியிலும் மிகச் சிறந்து விளங்கிய அவரே இராமரை புரிந்து கொள்ள நாம் செல்லும் வழியின் முதல் நுழை வாயில். அவரை புரிந்து கொள்ளாவிடில் நம்மால் இராமரையும் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. புக்தி மார்க கூற்றின்படி கடவுளைவிட ஒரு விழிப்புணர்ச்சி பெற்ற பக்தனே முதன்மையானவர். ஏன் எனில் கடவுளை சென்றடைய அவரே நமக்கு குரு போல வழிகாட்டியாக இருப்பவர்.

அனுமானிடம் இருந்தது சாதனா சக்தி, அதாவது தான் மேற் கொண்டிருந்த ஆன்மீக ஒழுக்க முறை. சாதனா சக்தியில் இருவகை உண்டு. தனக்குத் தானே ஏற்படுத்திக் கொண்ட சுய ஒழுக்கம் - அதை புருஷார்த்தா என்பர், இன்னொன்று கடவுள் தந்த வரம். இரண்டும் அவரிடம் இருந்ததினால்தான் அவரால் எதையும் சாதிக்க முடிந்தது.

சீதையைத் தேடிக் கொண்டு அனுமான் கடலைத் தாண்டிப் பறந்து சென்ற பொழுது, கடலுக்குள் மறைந்திருந்த மைனகா மலையிடம் கடல் கூறியது 'கடலைத் தாண்டிச் தொடர்ந்து சென்று கொண்டு இருக்கும் இராமனின் துாதுவருக்கு சற்று அவர் ஓய்வெடுக்க நீ உதவ வேண்டும். அப்பொழுதுதான் தான் பயணிக்கும் பொழுது இழக்கும் சக்தியை அவர் மீண்டும் உயிர்பித்துக் கொள்ள முடியும்.'

அதைக் கேட்ட மைனகா மலை மிகவும் மகிழ்வுற்று, அனுமானுக்கு உதவ நினைத்து தன்னுடைய சக்தியினால் அற்புதமான இயற்கை அழகுகள் கொண்ட மாபெரும் வனப் பிரதேசத்தை தன் மீது எழுப்பி பயணம் செய்து கொண்டு இருந்த அனுமானைக் கூவி அழைத்து ' பெரும் குரங்கே, என்னை கடல் அரசன் உனக்கு உதவுமாறு அனுப்பி உள்ளார். தொடர்ந்து பயணிக்கும் நீ என் மீது சற்று ஓய்வெடுத்துக் கொண்டு பயணத்தைத் தொடரலாம் அல்லவா ' என்றது. அதைக் கேட்ட அனுமார் கூறினார் 'சகோதரா, உன் அழைப்பிற்கு நன்றி. இராமர் கொடுத்துள்ள கட்டளையை நிறைவேற்றி முடிக்கும்வரை எனக்கு ஓய்வெடுக்க நேரம் கிடையாது. ஆகவே என்னை ஓய்வெடுக்கும்படி கட்டாயப்படுத்தாதே ' இப்படியாகக் கூறிவிட்டு அனுமார் தன் பயணத்தைத் தொடர்ந்தார்.

*இந்த நிகழ்ச்சியின் மூலம் என்ன போதிக்கப்பட்டது எனில் எவர் ஒருவர் தனக்கு அபரிதமான ஆத்ம பலம் உள்ளது என்பதை முழுமையாக உணர்ந்து கொள்வார்களோ அப்பொழுது கிடைக்கும் மன இன்பத்தில் ஆன்மீக பலம் இன்னமும் அதிகரித்து இதற்கும் மேல் ஒன்றும் தேவை இல்லை என்பதை புரிந்து கொள்வார்கள். அதாவது பல காத துாரம் ஒரு*

*புதையலைத் தேடிப் போனவன் அங்கு சென்று புதையலைக் கண்டதும் அடையும் சில நேர இன்பத்தை விட அந்தப் புதையல் மீதே வாழ்ந்து கொண்டு இருப்பவன், அதை தோண்டிப் பார்க்கக் கூட ஆசையின்றி மன இன்பத்துடன் வாழும் மனநிலையில் இருந்து விடுவான். புதையல் மீதே தான் அமர்ந்து இருக்கையில் புதையலைத் தேடி ஏன் போக வேண்டும் என எண்ணி விடுவான். ஆகவே என்ன இடையூறு ஏற்பட்டாலும், தற்காலிக இன்பம் கிடைத்தாலும் அதை ஏற்காமல் தான் மேற் கொண்ட கடமையை தொடர்ந்து கொண்டு இருக்க வேண்டும் என்பதையே அனுமானின் இந்த நிலை எடுத்துக் காட்டுகின்றது.*

அனுமானின் பயணம் தொடர்ந்தது. அப்பொழுது பாம்புக்களின் தலைவியான சுராசுரா என்ற நாகம் தன்னுடைய வாயை பெரியதாக திறந்து வைத்துக் கொண்டு அனுமானின் பாதையை வழி மறித்தபடிக் கூறியது ‘குழந்தாய், வானில் ஒரு அற்புதமான உணவு பறந்து கொண்டு வருகின்றது என என்னிடம் பலர் கூறினர். உன்னைப் பார்த்தால் அது நீயே எனத் தோன்றுகின்றது. ஆகவே என் வாயில் புகுந்து கொண்டு எனக்கு உணவாகுவாயா?’ அதைக் கேட்ட அனுமான் பயப்படவில்லை. மாறாகக் கூறினார் ‘அன்னையே நான் முதலில் இராமபிரானின் கட்டளைகளுக்கு ஏற்ப சீதை இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து அவரிடம் சேதியை தெரிவித்தப் பின் திரும்பி வருகின்றேன். அப்பொழுது நீ என்னை உன் விருப்பப்படி உணவாக்கிக் கொள்ளலாம் ’

ஆனால் சுராசுரா விடவில்லை. வழியை மறைத்தபடி அவர் பாதையை தடுத்தது. ஒரு கணம் யோசித்த அனுமார் கூறினார் ‘ சரி முடிந்தால் என்னை பிடித்துத் தின்று கொள் ’ உடனே அந்த பாம்பு தன் வாயை எட்டு மைல் பரப்பளவுக்கு பெரிதாக்கிக் கொண்டு அனுமனை நோக்கி வந்த பொழுது , அனுமான் தன்னை பதினாறு மைல் அளவில் பெரிதாக்கிக் கொண்டார். ஒவ்வொரு முறையும் பாம்பின் அளவை விட அனுமான் தன்னை இரு மடங்காக்கிக் கொண்டார். இப்படியாக பாம்பு மாற்றி அனுமான், அனுமான் மாற்றிப் பாம்பு என இருவரும் தம் உருவை பெரிதாக்கிக் கொண்டு நாடகமாட திடீரென அனுமான் தன் உருவை மிகச் சிறியதாக்கிக் கொண்டு

அந்த பாம்பின் நாக்கில் அமர்ந்து கொண்டு ‘இனி என்னை சாப்பிடு’ எனக் கூறினார். பாம்பும் அவசரம் அவசரமாக தன் வாயை சிறிதாக்கிக் கொண்டு அவரை முழுங்க நினைத்த பொழுது அதன் வாயில் இருந்து வெளியே குதித்தார் அனுமார். தன்னை ஏமாற்றி விட்ட அனுமானின் புத்தி சாதுர்யத்தைக் கண்ட பாம்பின் தலைவி கூறினாள் ‘ஓ, அனுமான் உண்மையில் நான் உன்னை சாப்பிட வரவில்லை. உன் சக்தியை சோதிக்கவே வந்தேன். நீ பெரும் சக்தி வாய்ந்தவன், புத்தி கூர்மை உள்ளவன் எனக் காட்டி விட்டாய். உன்னுடைய புத்தி சாதுர்யத்தினால் கண்டிப்பாக நீ இராமனின் கட்டளையை நிறைவேற்றுவாய். சீதையைக் கண்டு பிடிப்பாய் ’ என்று கூறி விட்டுச் சென்றாள்.

*இது நமக்குக் கொடுக்கும் செய்தி என்ன ? வளைந்து வளைந்து செல்லும் பாம்பு போன்றது நம் மனம். மனது மாறி மாறி பல ரூபங்களில் நம்மை ஆட்கொள்ளும் பொழுது நமக்கு கோபமும், பீதியும் தோன்றுகின்றன. எந்த ஒரு நிலைமையையும் சந்திக்கும் மனப் பக்குவம் பெற வேண்டும். எந்த நிலையையும் நாம் புத்தி சாதுர்யமாகவே சந்திக்க வேண்டும். ஆன்மீக பலமும், ஆத்ம பலமும் உள்ளவர், ஏதிர்ப்பு வலுப் பெற்று பெரியதாகிக் கொண்டு இருக்கையில் கூட அதை தைரியமாக எதிர் கொள்ளும் அளவுக்கு ஆத்ம பலத்தையும் ஆன்மீக பலத்தையும் பெருக்கிக் கொள்ள முடியும் என்பதை பாம்பின் வாய் பெரியதாக, அனுமானும் தன் உருவை பெரியதாக்கிக் கொண்ட நிகழ்ச்சி எடுத்துக் காட்டியது. .இரண்டாம் கட்டமாக இறைவனிடம் சரணாகதி அடைந்தது விடுவது போல பரந்து விரிந்த உலகில் ஒரு இடத்தில் சென்று அமைதியாக அமர்ந்தது போல பாம்பின் வாய்க்குள் சென்று அவர் அமர்ந்ததும், அந்த பரந்த உலகில் பற்று கொண்டு ஒட்டிக் கொண்டு விடாமல் மீண்டும் ஆன்மீகப் பயணத்தைத் தொடர அவர் பாம்பின் வாயில் இருந்து வெளியேறிய செய்கை ஒரு பாடமாக தரப்பட்டுள்ளது. தன்னுடன் பற்று கொண்டு ஒட்டிக் கொள்ளாமல் பயணத்தைத் தொடர்ந்த வைராக்கியம் வாய்ந்தவரை அதே உலகம் பாராட்டுகின்றது என்பதை சுராசுராவின் பாராட்டு மூலம் அறிய முடியும் . ஆக எந்த ஒரு நிலையையும் சமாளிக்க ஒருவருக்கு ஆன்மீக, ஆத்ம பலமும், கடவுளிடம் சரணாகதியும் முக்கியமான தேவைகள்.*